**சிலாபம் நகர சபை - 2023**
----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிலாபம் நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல், உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளையின் (அத்தியாயம் 255) 181(1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான சிலாபம் நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு (பொருத்தமானவாறு) இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாட்க்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) நகர சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,499,900 பெறுமதியான 09 நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 இறுதிக் கணக்குகளில் சீராக்கல் செய்வதறகு நடவடிக்கை எடுக்கப்படும். | நாளேட்டு பதிவுகள் ஊடாக திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டு தொடர்புபட்ட ஒதுக்கீடுகளிற்கு மெலாக முத்திரை வரிகளாக இருநத ரூபா 2,027,409 கணக்குகளிற்கு சீராக்கல் செய்வதற்கு நடடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

#### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 06 கணக்கீட்டு விடயங்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களிலுள்ள மீதிக்கும் பட்டியலிலுள்ள மீதிக்கும் இடையில் ரூபா 6,939,268 ஆன வித்தியாசங்கள் இருந்தன. | 2024 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது மாற்றங்களை திருத்தம் செய்வதறகு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆவணங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் சரியான மீதிகளை கணக்கிற்கு எடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| வேடப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்காமையால் ரூபா 339,468,688 தொகையான 07 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | 2024 இறுதிக் கணக்குகளில் திருத்தம் செய்வதறகு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளுடன் சேர்த்து கணக்குகள் தொடர்பான பட்டியல்களை சமர்ப்பிப்தற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாய சோசலீச குடியரிசின் நிதிப்பிரமாணம் 571(2) | நிதிக்கிரமாணத்தின் பிரகாரம் பொது வைப்புக்களில் 02 ஆண்டுகள் கடந்தவை தொடர்பில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 இறுதிக் கணக்குகளில் சீராக்கல் செய்வதறகு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயறபடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நகரசபைகள் கட்டளை பிரிவு 170 | அதிகதரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் 01 ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருக்கின் மதிப்பீட்டு வரி மற்றும் வாடகை என்பவற்றினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களை முன்கூட்டியே மதிப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடக் நிலுவைகளை அறவீடு மேற்கொள்ளப்படும். | நகர சபைகள் கட்டளைப் பிரகாரம் செயற்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 1975 இன் ஓய்வூதிய நிதிய கட்டளைகள் மற்றும் 1978 யூன் 07 ஆந் திகதிய 320/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமாணியில் வெளியிடப்பட்ட திருத்தம் உள்ளூராட்சி ஓய்வூதிய கட்டளையின் 36 ஆம் பிரிவு | மாதந்த ஓய்வூதிய பஙகளிப்புகளட முறைப்படி செலுத்தப்பட்டிருக்கவில்லை. | தகவல்கள் பெற்ற பின்னர் நிலுவையாக இருக்கின்ற தொகையை செலுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வர்த்தமாணி பிரகாரம் செயறபட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 49,142,527 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 10,554,339 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவா றான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவா றான மொத்த நிலுவை |
| | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 |
| வீதவரியும் வரியும் | 23,782 | 23,624 | 11,866 | 53,018 | 23,688 | 23,479 | 12,861 | 51,260 |
| வாடகை | 43,837 | 50,073 | 29,882 | 44,039 | 45,631 | 41,638 | 35,836 | 47,957 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 395 | 315 | 315 | - | 1,406 | 15,441 | 15,441 | - |
| ஏனைய வருமானம் | 16,553 | 25,901 | 24,403 | 292 | 3,454 | 10,126 | 5,710 | - |
| மொத்தம் | 84,567 | 99,913 | 66,466 | 97,349 | 74,179 | 90,684 | 69,848 | 99,217 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்த ரூபா 53,018,564 மதிப்பீட்டு நிலுகைளை மற்றும் ரூபா 45,056,428 ஆன வாடகை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகயாக இருக்கின்ற அத்தொகயை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலுவைகயாக இருக்கின்ற பணத் தொகையை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாணசபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 70,541,829 ஆன முத்திரை வரி சேகரிக்கப்பட வேண்டியிருந்தது. அதில் நிலுவயையாக இருக்கின்ற மீதிகளில் 01 ஆண்டினை விட | 2024 இறுதிக் கணக்குகள் தயாரிக்கையில் சீராக்கல் செய்வதறகு நடவடிக்கை எடுக்கக்பபடும். | சாத்தியமானளவு விரைவாக நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

குறைவான முத்திரை வரிகளாக ரூபா 28,669,800 உம் 01 ஆண்டிற்கு அதிகமாகவும் 03 ஆண்டுகளிற்கு குறைவாக ரூபா 41,872,029 உம் இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 27,500 இற்காக 2021 ஒக்தோபர் 01 கொள்வனவு செய்யப்பட்ட நீரிறைக்கும் இயந்திரம் மற்றும் 2022 யூலை 11 இல் காணாமல் பொன சிலாபம் பொதுச் சந்தையின் பொருத்தப்பட்டவை என்பன தொர்பில் அதே நாளில் பொலீஸ் முறைப்பர்டு செய்யப்பட்டு ஆரம்ப அறிக்கைகள் மற்றும் இறுதி இறிக்கைகள் கோவையில் இருந்த போதிலும் இது தொடர்பில் மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குழுவிற்கு தொடர்புபடுத்தி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | இறுதி அறிக்கையின் பின்னர் நிதிப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டவாறு செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 இல் நூலக தானியங்கி செயற்திட்டத்தின் கீழ் கோகா மென்பொருளுடன் வழங்கப்பட்ட 08 கருவிகள் 6 ஆண்டுகளாக செயற்படாதிருந்ததுடன் மீள செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | துன்கன்னாவ பொது நூலகத்தல் இந் மென்பொருள் அமுலர்கப்படுகின்றன. நாங்கள் அந்த நூலகத்துடன் ஆலோசிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தோம். As this | உடனடியாக மென்பொருளை செயற்படுத்துவதற்கு நடவடிககை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணககுகளின் பெறுமதி ரூபா 259,977,260 ஆக இருநதது. அம்மீதிகளில் ரூபா 125,949,156 ஆன தொகை 03 ஆண்டுகளை விஞ்சியிருந்ததுடன் அந்த நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறிவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உடனடியாக பெற வேண்டிய மீதிகளை அறிவிடுவதற்கு ஒழுங்குகுள் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் கணக்கு மீதியின் பெறுமதி ரூபா 42,753,233 ஆக இருந்ததுடன் ரூபா 15,269,396 ஆன மீதி 03 ஆண்டுகளை விஞ்சிய மீதிகளாக இருந்தது. | 2024 இறுதிக கணக்குகள் தயாரிக்கையில் தீப்பனவு செய்வதறகு நடவடிக்கை எடுக்பபடும். | கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு உடனடியாக நடவடிககை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 இல் சிலாபம் வைத்தியசாலைக்கு செர்லி கொராய மண்டபம் வழங்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்காததுடன் 2023 அளவில் சபையால் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டிலிலுந்து 2023 மே 31 வரை வாடகை நிலுவை ரூபா 3,646,100 ஆக இருந்தது. | உடன்படிக்கை ஒபபந்தம் கைச்சத்திடுவதற்கு அறிவிக்கப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து அனுமதி மற்றும் அறிவுறுத்தல்கள் வேண்ப்பட்டிருந்தது. | நிலுவைகளை அறிவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 மார்ச் மாதத்தில் கோவிட் சிகிச்சை நிலைத்திற்காக சிலாபம் மரின்ஸ் இன்டோர் மைதானத்தை கையளிப்பதற்கு 03 ஆண்டுகளிற்கு மேலாக கடந்திருந்ததுடன் அதனை திரும்ப கையேற்பதற்கோ அல்லது உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரிந்துரைகளின் அடிப்படையில் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனை மற்றும் அனுமதிக்கு நெறிப்படுத்தல் கடிதத்தில் அனுமதி பெறப்பட்டது. | கட்டிடங்களை திரும்ப பெறுவதற்கு அல்லது சபையுடன் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |

### 3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் ரூபா 2,842,210 கிரயத்தில் பொருத்தப்பட்ட 21 குளிரூட்டல் சாதனங்களில் ரூபா 692,337 பெறுமதியான 07 சதானங்கள் அவற்றினை செயற்படுத்துவதற்கு போதிய மின்வழங்கல் இன்மையால் பயன்படுத்தப்படாது இருந்தது. | பம்பல காக்காபள்ளி கணக்காய்வு உப அலுவகத்தால் செய்யப்பட்ட வேண்டுகையின் பிரகாரம் அந்த சாதனங்களை வழங்குவதற்கு அவசியமான அறிவுறுத்தல்கள் வேண்டப்பட்டிருந்ததுடன் அதற்காக பெறப்பட்ட தீர்வுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். | சபை நிதிகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பௌதீக வளங்களில் அதிக பயன்களை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையின் அதிகார எல்லைக்குள் மைதானங்கள் மற்றும் காட்டு மைதானம் உள்ளடங்க சபையால் பயன்படுத்தபபட்ட 38 காணிகள் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது உரிய ஆரம்ப கட்டணங்கள் செலுத்திய பின்னர் 09 காணிகளை கையேற்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. | உரிய ஆதனங்களின் சட்ட உரிமையை பெறுவதற்கு உடனடியாக ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| முதலாவது மாடியில் கொங்றீட் பூச்சு மீதான வயரிங் போன்ற நிர்ரான வேலைகளின் தரத்திலுள்ள குறைபாடு காரணமாக வெடித்து | ரூபா 62,344,280 கிரயத்தில் 2019/12/10 இல் நிர்மாணம் பூர்த்தியான திகதி தவறாக உள்ளதுடன் பூர்த்தியாக்கல் திகதி | சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் நிர்மாண வெலைகள் |

| | | |
|---|---|---|
| வீழ்ந்திருந்ததுடன் பாதுகாப்பற்று இருந்தது. முதலவது மாடியின் சீமெந்து பூச்சிலிருந்து நீர் கசிகின்றதுடன் வயர்கள் வெடித்திருந்ததுடன் கொங்றீட் பூச்சுகள் வீழ்ந்திருந்ததுடன் 2008 திசெம்பர் 02 இல் புதிய புதிய கடைத்தொகுதியின் பூர்த்தியாக்கலின் சில ஆண்டுகளின் பின்னர் முதலாவது மாடி சீலிங் பான் விழுந்திருந்தது. கட்டிடததின் இரண்டாவது மாடியின் நிமாணங்களில் செலவழித்த ரூபா 62,344,280 ஆன மொத்தத் தொகை பயனற்றிருந்தது. | மற்றும் சிலாபம் மாநகர சகைக்கு கையளிக்கப்பட்டது 2008/12/02 ஆக உள்ளது என தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். | முறையான நிலை மற்றும் தரத்துடன் செய்யப்பட வேண்டும். |

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நிறைவேற்று தரத்தில் ஒரு பதவி குறைவாக இருந்து, மூன்றாம் நிலை தரத்தில் 01 பதவி மிகையாகவும் குறைவாகவும் இருந்ததுடன் இரண்டாம் நிலைத் தரத்தில் 42 ஊழியர்கள் குறைவாக இருந்ததுடன் 11 ஊழியர்கள் மிகையாக இருந்தனர் ஆரம்ப தர பதவிகளில் 78 ஊழியர்கள் குறைவாக இருந்தனர். | 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை பிரகாரம் ஆட்சேர்ப்பகள் நிறுத்தப்பட்டிருந்தது. | சபையால் வைைப்பட்ட சரியான ஊழியர் எண்ணிக்கையை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அந்த ஊழியர் எண்ணிக்கையை அனுமதிப்பதறகு ஒழுங்குகள் செய்யப்பட வெண்டும். |

### 3.7 வாகனத் தொகுதியின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2022 செப்தெம்பர் 30 இல் கைதவிர்க்க வேண்டுமென பரிந்துரைத்த 05 வாகனங்களின் மதிப்பீட்டு அறிக்கை உள்ளுராட்சி ஆணையாளரின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் இதுவரை அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு குழுவின் வேலைகள் முடிவடைந்திருக்கவில்லை. | வாகனங்களை மதிப்பிடுவதற்கும் அதனை உடனடியாக கைதவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 20 வித்தியாசமான பணிகள் நிறைவேற்றுவத்கு ரூபா 6,269,066 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும் பூர்த்தியாக்கல் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் அடையப்பட்டிருக்கவில்லை. | அரச செலவின கட்டுப்பாட்டு சுற்றறிக்கை பிரகாரம் செலவினங்களை கட்டுப்படுத்த வெண்டியிருந்தமையால் பூர்த்தியாக்கல் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் அடைய முடியாதிருந்தது. | சகல துறைகளையும் மேவி உள்ளக கணககாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4.2 உள்ளக கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையினுடைய உள்ளக கணக்காய்வு கைத்தொழில் பரிசோதலை, நூலக பரிசோதனை, வீதி விளக்கு பொருத்துதல் மற்றும் நிலையான சொத்து ஆவணங்கள் மற்றும் பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டியவைகளின் நீண்ட கால் நிலுவை தீர்ப்பனவுகள் போன் துறைகளில் கவனம் செலுததயிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் உள்ளக கணக்காய்வை வலுப்படுத்துவதற்கு தேவையான நடைமுறைகள் எடுக்கப்படும். | சபையின் சகல நடவடிக்கைகளையும் மேவுவதற்கு போதிய உள்ளக கணக்காய்வை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நெகிழ்சியான மற்றும் உள்ளபடியான பாதீடுகளை தயாரிக்காமையால் 25 லெவிய விடயங்களிற்காக ரூபா 2,337,000 ஆன மொத்த ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிரந்ததுடன் 25 செலவின விடயங்களிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 33,062,380 50 சதவீதத்திலிருந்து 98 சதவீதம் வரையான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட பாதீடு தயாரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு செயற்திட்டங்களுடைய தலைப்புகளிற்காகவும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதுடன் அரச செலவின கட்டுப்பாட்டு சுற்றறிக்கை பிரகாரம் செலவினங்களை கட்டுப்படுத்த வெண்டியிருந்தமையால் பூர்த்தியாக்கல் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் அடைய முடியாதிருந்தது. | பாதீட்டு இலக்குகளை அடையும் நொக்கில் செயற்பாட்டு நடவடிக்கைகள் திட்டமிட வேண்டும். |

## 4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையானது 13 உலகளாவிய அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டதுடன் 2023 ஆம் ஆண்டின் பொது அந்த இலக்குகளை அடைவதற்கு 66 நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு திட்டமிடப்பட்டது. அந்த நடவடிக்கைகளில் 25 முழுமையாக பூர்த்தியாக்கப்பட்டிக்காததுடன் 41 நடவடிக்கைகளின் முன்னேற்றம் 05 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. | பூர்த்தியாக்கலின் எதிர்பார்க்கப்பட்ட மட்டம் அடைய முடியாதிருந்ததுடன் அரச செலவின கட்டுப்பாட்டு சுற்றறிக்கை பிரகாரம் செலவினமாக கட்டுப்படுத்த வேண்டியிருந்தது. | பொருத்தமான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்குகள் அடைவதற்கு முயற்சி எடுக்கப்பட வேண்டும். |